


**16.03.2025**

## தலைப்புச்செய்திகள்

1. ரைசினா பேச்சுவார்த்தைகளை பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் நாளை தொடங்கிவைக்கிறார்.

2. போதை பொருள் இல்லா தேசத்தை உருவாக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க தனி மனித ஆரோக்கியம் மற்றும் உடல் திறன் அவசியத்தை மத்திய அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

4. வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று தென் தமிழகம் மற்றும் வட தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் 20-20 கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று வெஸ்ட் இண்டிஸை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

***********

### பிரதமர் - நியூசிலாந்து

பிரதமர் திரு.நரேந்திரமோடி 10ஆவது ரைசினா பேச்சுவார்த்தைகளை புதுதில்லியில் நாளை தொடங்கிவைக்கிறார்.

வரும் 19ஆம் தேதிவரை நடைபெறும் இம்மாநாட்டில் நியூசிலாந்து பிரதமர் ஸெலான் கிறிஸ்டோபர் சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரையாற்றகிறார்.

முன்னதாக 5 நாள் அரசு முறை பயணமாக இன்று இந்தியா வரும் நியூசிலாந்து பிரதமர் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோரை புதுதில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

இந்தியா - நியூசிலாந்து இடையே இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி மக்கள் தொடர்பை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்தும் அவர் பிரதமருடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

தொடர்ந்து பிரதமருடன் மும்பை செல்லும் கிறிஸ்டோபர் தொழில் அதிபர்களுடன் கலந்துரையாடுகிறார்.

***********

### பிரதமர் - கலந்துரையாடல்

பிரதமர் திரு.நரேந்திரமோடியுடன் பிரபல ஊடகவியலாளர் லெக்ஸ் ஃபிரிட்மேனின் இணையவழி கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்று ஒலிபரப்பாகிறது.

பொதுவாழ்க்கை, சாதனைகள், தன்னலமற்ற சேவை, இளமை பருவம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த தமது அனுபவங்களை பிரதமர் இதில் பகிர்ந்துகொண்டுள்ள நிலையில் இந்நிகழ்ச்சியை பொதுமக்கள் தவறாமல் கேட்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

***********

**அமித்ஷா**

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு போதை பொருள் இல்லா தேசத்தை உருவாக்க உறுதி பூண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம், குஹாட்டி, இம்பாலில் 88 கோடி ரூபாய் மதிப்பிலான போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர் தேசிய போதை பொருள் தடுப்பு அமைப்பின் சீரிய நடவடிக்கைகளால் இது சாத்தியமாவதாக தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே வடகிழக்கு மாநிலங்களில் புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துவது குறித்து அம்மாநில முதலமைச்சர்களுடன் குஹாட்டியில் திரு.அமித்ஷா இன்று ஆலோசனை மேற்கொள்கிறார்.

முன்னதாக கோக்ரஜாரில் அனைத்து BODO மாணவர் சங்கத்தின் 57ஆம் ஆண்டு மாநாட்டிலும் அமைச்சர் இன்று உரையாற்றுகிறார்.

***********

**மன்சூக் மாண்டவியா**

வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க உடல் திறனின் அவசியத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

ஞாயிறு தோறும் சைக்கிள் பயிற்சியை அஹமதாபாத்தில் இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் உடல் பருமன் சவாலை எதிர்கொள்ள சைக்கிள் பயிற்சி இன்றியமையாதது என்றார்.

இதனை தொடர்ந்து புதுதில்லியில் இன்றுமாலை முதலாவது ஃபிட் இண்டியா திருவிழாவை அமைச்சர் தொடங்கிவைக்கிறார்.

“நடனத்தின் மூலம் உடற்பயிற்சி” என்ற கருப்பொருளில் 3 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பல்வேறு உடல் திறன் பயிற்சிகள் குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

கேலோ இந்தியா பாரா விளையாட்டு போட்டிகளின் லட்சினை மற்றும் பாடலும் இன்று வெளியிடப்படுகிறது.

***********

**அமைச்சர்கள் மாநாடு**

14ஆவது ஆசியான் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாடு புதுதில்லியில் வரும் புதன் கிழமை தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் இந்தோனேசியா, புரூனே, லாவோஸ் மலேசியா, உள்ளிட்ட ஆசியான் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுடன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான், அமெரிக்கா, சீனா உள்ளிட்ட 8 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கின்றனர்.

தீவிரவாத சவால்களை திறம்பட எதிர்கொள்வதற்கான ஒருங்கிணைந்த கொள்கை முடிவுகளை வகுப்பது குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படும்.

***********

## My Bharath

மத்திய அரசின் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான இளைஞர்கள் பாராளுமன்றம் நிகழ்ச்சிக்கு பதிவு செய்ய இன்று கடைசி நாளாகும்.

18 முதல் 25 வயதிற்குட்பட்டவர்கள் இதுகுறித்த ஒரு நிமிட காணொலி பதிவை My Bharath இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

திருச்சி தஞ்சை மதுரை கோவை உள்ளிட்ட 15 நகரங்களில் வரும் 18ஆம் தேதி தொடங்கி 23ஆம் தேதி வரை நடைபெறும் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இளைஞர்கள் பாராளுமன்றம் நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

**அஷ்விணி வைஷ்ணவ்**

அதிவிரைவு போக்குவரத்து தொழில்நுட்பத்தில் இந்தியா விரைவான வளர்ச்சி கண்டுவருவதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சென்னை இந்திய தொழில்நுட்ப கழகத்தில் 410 மீட்டர் நீள ஹைபர் லூப் தொழில்நுட்ப செயல்பாடுகளை நேரில் ஆய்வு செய்த அவர் இதன் மூலம் உலகின் மிகப்பெரிய ஹைபர் லூப் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்தியில் சென்னை ஒருங்கிணைந்த ரயில்பெட்டி தொழிற்சாலையில் இதற்கான மின்னணு உதிரி பாகங்கள் தயாரிக்கப்படுவதாக கூறினார்.

***********

**கஜேந்திரசிங் ஷெகாவத்**

மத்திய கலாச்சார, சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் திருச்சி ஸ்ரீரங்கம் அருள்மிகு காட்டழகிய சிங்கர் திருக்கோவில் வளாகத்தில் கம்பராமாயண பாராயண நிகழ்வை நாளை மறுநாள் தொடங்கிவைக்கிறார்.

இளைய தலைமுறையினரிடையே கம்பராமாயணம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இதன் தொடர்ச்சியாக கம்பர் பிறந்த மயிலாடுதுறை மாவட்டம் தேரழுந்தூர் கம்பர்மேடில் வரும் 20ஆம் தேதிமுதல் 10 நாட்களுக்கு கம்பராமாயண பாராயண நிகழ்வுகள் கோலாகலமாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

***********

**கிஷன் ரெட்டி**

ஹைதராபாத் பேகம்பட் ரயில் நிலையம் முழுமையாக பெண் ஊழியர்களால் இயக்கப்படும் என்று மத்திய நிலக்கரி சுரங்கத்துறை அமைச்சர் திரு.கிஷன் ரெட்டி அறிவித்துள்ளார்.

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் அங்கு நடைபெற்று வரும் நவீனமயமாக்கல் பணிகளை ஆய்வு செய்த அவர் 40 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் இப்பணிகள் 90 சதவிகிதம் நிறைவடைந்துள்ளதாக கூறினார்.

***********

**உச்சநீதிமன்றம்**

உச்சநீதிமன்ற நீதிபதியாக, நீதிபதி ஜாய்மால்யா பக்சி நாளை பதவி ஏற்கிறார்.

தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைக்கிறார்.

***********

**தடுப்பூசி தினம்**

தேசிய தடுப்பூசி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்வதில் தடுப்பூசி முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து உயிரிழப்பு விகிதத்தை குறைப்பதற்கான இந்திர தனுஷ் தடுப்பூசி முன்னோடி திட்டம் கடந்த 2014ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

***********

**சட்டப்பேரவை**

தமிழக சட்டப்பேரவையில் 2025-26ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்கள் மற்றும் பதிலுரை நாளை தொடங்கி வரும் 21ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

இதனை தொடர்ந்து வரும் 24ஆம் தேதிமுதல் அடுத்த மாதம் 30ஆம் தேதிவரை நீர்வளம், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, வருவாய் பேரிடர் மேலாண்மை, நெடுஞ்சாலைகள் துறை, உயர்கல்வி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு உள்ளிட்ட பல்வேறு துறை ரீதியான மானிய கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்கு அந்தந்த துறை அமைச்சர்கள் பதில் அளித்து முக்கிய அறிவிப்புகளை வெளியிடுகின்றனர்.

***********

**கே.என்.நேரு**

திருச்சி மாவட்டம் முசிறி மோருபட்டி, தாத்தையங்கார்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வாரசந்தை மேம்பாட்டு பணிகள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பணிகளை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு இன்று தொடங்கிவைத்தார்.

***********

**மூர்த்தி**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஏறு தழுவுதல் அரங்கத்தில் ஜல்லிக்கட்டு போட்டியை மாநில வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

இப்போட்டியில் ஆயிரம் காளைகளை அடக்க 650 வீரர்கள் களத்தில் உள்ளனர்.

***********

**கிஸான் சம்மான்**

பெரம்பலூர் மாவட்டத்தில் பிரதமரின் கிஸான் சம்மான் நிதி திட்ட தவணை தொகை பெற விவசாயிகள் வரும் 31ஆம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும் என ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

***********

**வேலூர் வாய்ஸ்**

மத்திய அரசின் பிரதமரின் காப்பீடு திட்டத்தில் வேலூர் மாவட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் இணைந்து பயன்பெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

**விருது**

ஹாக்கி விளையாட்டை ஊக்குவிப்பதிலும், ஒலிபரப்புவதிலும் சிறப்பான பங்களிப்பை அளித்ததற்காக **ஹாக்கி இந்தியா ஜமன்லால் ஹர்மா** விருது பிரசார் பாரதி ஒலிபரப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இவ்விரு வழங்கப்பட்டது.

***********

**தீ விபத்து**

தூத்துக்குடி அனல்மின் நிலைய குளிரூட்டும் அறையில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில் தீயை அணைக்கும் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

**வாய்ஸ்**

***********

**விபத்து**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே இரு சக்கர வாகனம் மீது அரசு பேருந்து மோதிய விபத்தில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

விபத்து குறித்து செஞ்சி காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

***********

**இருவரி**

**கன்னியாகுமரி கடல் பகுதிகளில் கடல் சீற்றம் காரணமாக** விவேகானந்தர் நினைவு பாறை மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு படகு போக்குவரத்து இன்று நிறுத்தப்பட்டுள்ளது.

**திருச்செந்தூரில் 2ஆவது நாளாக இன்றும் கடல்** உள்வாங்கி காணப்படுகிறது.

இதையடுத்து பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

**தர்மபுரி மாவட்ட விவசாயிகள் வேளாண்** அடுக்கு திட்டத்தில் தங்களது ஆவணங்களை பதிவு செய்ய வரும் 31ஆம் தேதிவரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.சதீஷ் தெரிவித்துள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் கர்ப்ப கால** உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் ஆயிரத்து 200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு யோக பயிற்சி சரிவிகித உணவு முறைகள் உள்ளிட்டவைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

***********

**மாரத்தான்**

விளையாட்டு துறையில் மகளிரின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் ஈரோட்டில் மாரத்தான் போட்டியை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.ஜவஹர் இன்று தொடங்கிவைத்தார்.

ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

***********

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று தென் தமிழகம் மற்றும் வட தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே கன்னியாகுமரி நெல்லை தென்காசி தூத்துக்குடி மாவட்டங்களில் அடுத்த சில மணி நேரத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

அடுத்த 5 நாட்களுக்கு தமிழகத்தில் அதிகபட்ச வெப்ப நிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

***********

**கிரிக்கெட்**

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் 20-20 கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று வெஸ்ட் இண்டிஸை எதிர்கொள்கிறது.

ராய்பூரில் இரவு ஏழரை மணிக்கு இப்போட்டி நடைபெறுகிறது.

***********

**மல்யுத்தம்**

ஆசிய சீனியர் மல்யுத்த சாம்பியன் பட்ட போட்டியில் பங்கேற்க இந்தியா சார்பில் தீபக் புனியா, ஆன்டிம் பங்கல் உள்ளிட்ட 30 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

வரும் 25ம் தேதிமுதல் 30ஆம் தேதிவரை ஜோர்டானில் இப்போட்டிகள் நடைபெற உள்ளன.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

***********